வேளாண்மைக் கருவிகள் பழுதுபார்க்கும் நிலையங்கள்

*619 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டிராக்டர்கள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கும் நிலையங்களை தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகம் மூலம் நிறுவும் திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில். அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஆம். பன்னிரண்டு நிலையங்கள் அமைப்பதற்கான ஆக்கவேலைகள் நடைபெறுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த 12 நிலையங்களை எங்கெங்கு அமைப்பதற்கு தற்போது திட்டமிடப்பட்டுள்ளது? மொத்தம் செலவு எவ்வளவு என்பதையும் அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நிலையம் ஒன்றுக்கு 2.89 லட்சம் ரூபாய்; பன்னிரண்டு நிலையங்கள், முசிரி, வேலூர், கடலூர், சிவகங்கை, தஞ்சை, மதுரை, தர்மபுரி, கோவை, சேலம், புதுக்கோட்டை, செங்கல்பட்டு, திருநெல்வேலி.

Meat Inspection Laboratory, Madras

*620 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the number of demonstrations and practical illustrations organised at the Meat Inspection Laboratory, Madras for the illiterate persons from 29th February 1972 (date of opening of the Laboratory); and

(*b*) the number of Health Officers and Sanitary Inspectors who were given training in the laboratory on 'Meat Hygiene'?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) இரண்டு.

(இ) மூன்று